இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 24-08-2023

# தேர்தல் ஆணையம் சிதைப்பு

உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியை புறக்கணித்திருப்பதன் மூலமாக தேர்தல் ஆணையத்தை சிதைத்துவிட்டது ஒன்றிய பா.ஜ.க. அரசு!

**உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியை நீக்கிவிட்டு அமைச்சரை நியமிப்பதன் மூலமாக தேர்தல் ஆணையத்தை தனது கைப்பாவையாக ஆக்க முயற்சித்துள்ளார் பிரதமர் நரேந்திர மோடி. தேர்தல் ஆணையத்தின் ரிமோர்ட் பிரதமர் கைக்கு போய்விட்டது. தனித்துச் செயல்பட வேண்டிய தேர்தல் ஆணையத்தை அரசியல் அமைப்பாக, அதுவும் ஆளும் கட்சியின் அரசியல் அமைப்பாக மாற்றும் தந்திரத்தை பட்டவர்த்தனமாகச் செய்துவிட்டார் பிரதமர் மோடி. இது தேர்தல் ஆணையத்தைச் சிதைப்பது மட்டுமல்ல உச்ச நீதிமன்றத்தையும் அவமானப்படுத்துவது ஆகும்.**

உச்சநீதிமன்றத்தை உதாசீனப்படுத்த வேண்டும், அப்படி உதாசீனப் படுத்துவதை அந்த உச்சநீதிமன்றத்துக்குத் தெரிவது மாதிரி செய்ய வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டு செயல்பட்டுள்ளது ஒன்றிய அரசு.

தலைமைத் தேர்தல் ஆணையர், தேர்தல் ஆணையர்கள் ஆகியோரைத் தேர்ந்தெடுக்கும் தேர்வுக் குழுவில் இருந்து உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியை நீக்கும் முடிவை பா.ஜ.க. அரசு எடுத்துள்ளது. இனிமேல், பிரதமர் தலைமையிலான குழுவுக்கு அந்த அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பான சட்ட முன் வடிவு மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்டது.

இந்தக் குழுவில் பிரதமர், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர், பிரதமரால் பரிந்துரைக்கப்படும் ஒன்றிய அமைச்சர் ஒருவர் இடம் பெற்றிருப்பார்கள். இதற்கு முன் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி இருந்த இடத்தை, ஒன்றிய அமைச்சரை வைத்து நிரப்பி இருக்கிறார்கள்.

அமைச்சரவை செயலர் மற்றும் அரசுச் செயலர் பதவிக்குக் குறையாத இரண்டு அதிகாரிகள் கொண்ட தேடல் குழுவானது 5 பேரை தேர்வுக் குழுவுக்கு பரிந்துரைக்க வேண்டும். அந்த ஐந்து பேரில் உள்ளவர்களையோ அல்லது அவர்களைத் தாண்டிய வேறு யாரையுமோ பிரதமர் தலைமையிலான தேர்வுக் குழுவானது தேர்வு செய்யலாம். பரிந்துரைக்கு வெளியில் இருந்தும் ஆட்களை எடுக்கலாம் என்றால், எதற்காக அந்த பரிந்துரைக் குழுவை அமைக்க வேண்டும் என்பதும் தெரியவில்லை.

**மிக சந்தேகத்துக்கு உரிய வகையில் தேர்தல் ஆணையர் அருண் கோயல் என்பவரது நியமனம் நடந்தது. இவர் பஞ்சாப் மாநில அதிகாரி ஆவார். இவர் 2022 ஆம் ஆண்டு நவம்பர் 18 ஆம் நாள் திடீரென அவராக பதவி விலகினார். மறுநாளே இவர் தேர்தல் ஆணையராக நியமிக்கப்பட்டார். அதாவது தேர்தல் ஆணையராக இவரை நியமிப்பதற்காகவே பதவி விலக வைத்துள்ளார்கள் என்பது வெளிப்படையான செய்தி ஆகும். அருண் கோயல் நியமனத்துக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் பல்வேறு தரப்பினரும் வழக்கு தாக்கல் செய்தார்கள். இதுபோன்ற முக்கியமான பணியிடத்துக்கான தேர்வை கொலிஜியம் போன்ற அமைப்புதான் நடத்த வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை வைத்தார்கள்.**

தேர்தல் ஆணையர் நியமனம் செய்வது தொடர்பான வழக்கு கடந்த மார்ச் மாதம் உச்சநீதிமன்றத்தில் வந்தது. நீதியரசர் கே.எம்.ஜோசப் தலைமையிலான ஐந்து நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வு அதனை விசாரித்தது. அருண் கோயலின் நியமனத்தில் சந்தேகங்கள் இருப்பதாக நீதிபதிகள் சொன்னார்கள். தலைமைத் தேர்தல் ஆணையர், பிற தேர்தல் ஆணையர்களின் நியமனமானது சுதந்திரமாக நடைபெற வேண்டும் என்பதே உச்சநீதிமன்றத்தில் போடப்பட்ட வழக்கின் கோரிக்கை ஆகும். கடந்த மார்ச் மாதம், அரசியல் சாசன அமர்வு தனது வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கியது.

**"பிரதமர், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி ஆகியோர் அடங்கிய குழுவின் அறிவுறுத்தலின்படி, தேர்தல் ஆணையர்கள், தலைமை தேர்தல் ஆணையர் ஆகியோரை குடியரசுத் தலைவர் நியமனம் செய்ய வேண்டும். மக்களவை எதிர்க்கட்சி தலைவர் இல்லை என்றால், தனிப் பெரும்பான்மையுள்ள எதிர்க்கட்சியின் தலைவர், இந்த குழுவில் இடம்பெற வேண்டும். தேர்தல் ஆணையர்கள் நியமனம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றும் வரை இந்த நடைமுறை தொடரும்.**

**ஜனநாயகத்தில் தேர்தல் எந்தவித சந்தேகமும் இன்றி நியாயமாக நடைபெற வேண்டும். புனிதத்தன்மை காக்கப்படுவதை தேர்தல் ஆணையம் உறுதி செய்ய வேண்டும். இல்லையென்றால் மோசமான விளைவுகள் ஏற்படும்.**

**அரசியல் சாசன அமைப்புக்கு உட்பட்டு தேர்தல் ஆணையம் சட்டப்படி செயல்பட வேண்டும். நியாயமற்ற முறையில் செயல்பட முடியாது. நியாயமான தேர்தலை தேர்தல் ஆணையத்தால் உறுதி செய்ய முடியவில்லை என்றால், ஜனநாயகத்தின் அடித்தளமாக விளங்கும் சட்ட விதிகளின் கீழ் அளிக்கப்பட்ட உத்தரவாதங்கள் சிதைந்து போகும். அரசியல் சாசனத்தின் 324வது பிரிவில், தேர்தல் ஆணைய உறுப்பினர்கள் நியமனத்துக்கு சட்டம் இயற்ற வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் எந்த சட்டத்தையும் நாடாளுமன்றம் நிறைவேற்றவில்லை" என்று அரசியல் சாசன அமர்வு கூறியது.**

உடனே ஒரு சட்டத்தை கொண்டு வந்துவிட்டார்கள். உச்சநீதிமன்ற நீதிபதிக்கு பதிலாக பிரதமர் விரும்பும் அமைச்சரை நியமித்துவிட்டார்கள். அதாவது உச்சநீதிமன்றத்தோடு நேருக்கு நேராக மோதுகிறது பா.ஜ.க. அரசு.

'அமலாக்கத்துறையை கவனிக்க சஞ்சய் குமார் மிஸ்ராவைத் தவிர வேறு யாரும் இல்லையா?' என்று கேட்டதல்லவா உச்சநீதிமன்றம். அதற்கு பழிவாங்கவே இதுபோன்ற நடவடிக்கைகளை ஒன்றிய அரசு எடுத்து வருகிறது.

**"பிரதமர் ஆலோசனையின் பேரில் குடியரசுத் தலைவரால் தேர்தல் ஆணையக் குழு உறுப்பினர்களை நியமிக்கும் தற்போதைய அமைப்பு மக்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்தவில்லை" என்று 2012 ஆம் ஆண்டு ஜீன் 2 ஆம் தேதி அப்போதைய பிரதமர் மன்மோகன் சிங்குக்கு கடிதம் எழுதியவர் அப்போதைய பா.ஜ.க. தலைவர் அத்வானி. அத்தகைய நம்பிக்கைத் தகர்ப்பைத்தான் இன்றைய பிரதமர் செய்துள்ளார். கூடுதலாக சிதைக்கவும் செய்துவருகிறார்.**

●●



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.8.2023) தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் வேலூர் மாவட்டம், பேர்ணாம்பட்டு அரசு மருத்துவமனையில் 7 கோடியே 58 இலட்சத்து 58 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய புறநோயாளிகள் பிரிவுக் கட்டடம், தேனி மற்றும் திருவண்ணாமலை ஆகிய இடங்களில் 13 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தலா 50 படுக்கை வசதிகளுடன் ஒருங்கிணைந்த ஆயுஷ் மருத்துவமனைகள் ஆகியவற்றை திறந்து வைத்தார். மேலும், வேலூர் அரசு பென்ட்லேண்ட் மருத்துவமனை வளாகத்தில் 150 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனைக்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆணையர் திருமதி மைதிலி கே.ராஜேந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தென்மேற்கு பருவமழை 8% குறைவு!

### வானிலை மையம் தகவல்!

*சென்னை, ஆக.24-*

*தென்மேற்கு பருவமழை வழக்கத்தைவிட 8 சதவிகிதம் குறைவாக பெய்துள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை தொடங்கியது முதல் கேரளம், தமிழகம், கர்நாடகம் உள்ளிட்ட மாநிலங்களில் வழக்கத்தைவிட மழை குறைவாகவே காணப்பட்டது.*

*இந்த நிலையில், ஜுன் 1ஆம் தேதி தென்மேற்கு பருவமழை தொடங்கியது முதல் ஆக. 22 வரை 167.6 மில்லி மீட்டர் மழை மட்டுமே பெய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இதே காலகட்டத்தில் வழக்கமாக 182.2 மில்லி மீட்டர் மழை பெய்திருக்க வேண்டும் என்ற நிலையில், 8 சதவிகிதம் குறைவாக பெய்துள்ளது.*



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை தின கொண்டாட்டத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் (22.08.2023) பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில், "தி இந்து" குழுமத்தின் ஆவண காப்பகத்தில் இருந்து செறிவாக தேர்வு செய்யப்பட்ட சென்னை நகரின் புகைப்படத் தொகுப்புகளைக் கொண்ட புகைப்படக் கண்காட்சியை திறந்து வைத்து, பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், "தி இந்து" குழுமத்தின் தலைவர் திருமதி நிர்மலா லஷ்மண், இயக்குநர்கள் என்.ராம், என்.முரளி, என்.ரவி, மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### உணவு விநியோகப் பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள்

## முதல்வர் மு.க.ஸ்டாலினைச் சந்தித்து நன்றி தெரிவித்தனர்!

### 'தனி வாரியம் அமைத்து நலன் பாதுகாக்கப்படும்' என்று அறிவித்தமைக்காக!

**சென்னை, ஆக. 24-**

**உணவு விநியோகம் மற்றும் சேவைப் பணிகளில் ஈடுபட்டுள்ள அமைப்புசாரா தொழிலாளர்களான கிக் (Gig) தொழிலாளர்களின் நலனை பாதுகாக்கும் விதமாக தனி நல வாரியம் அமைக்கப் படும் என்று அறிவித்தமைக்காக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை அத்தொழிலாளர்கள் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (22.8.2023) தலைமைச் செயலகத்தில், இணைய வழி சேவை நிறுவனங்களின் வாயிலாக உணவு விநியோகம் மற்றும் சேவைப் பணிகளில் ஈடுபட்டுள்ள அமைப்பு சாரா தொழிலாளர்களான கிக் (Gig) தொழிலாளர்கள் சந்தித்து, சுதந்திர தின விழா உரையில், தங்களது நலனை பாதுகாக்கும் விதமாக தனி நல வாரியம் அமைக்கப்படும் என்று அறிவித் தமைக்காக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

முதலமைச்சர் அவர்கள் 15.8.2023 அன்று சுதந்திர தின விழா உரையில், "சென்னை போன்ற பெருநகரங்களில் தொடங்கி, பல்வேறு நகரங்களிலும் இன்று நாம் அடிக்கடி காணக்கூடிய காட்சி ஒன்று. ஓலா, ஊபர், ஸ்விகி, ஸொமட்டோ போன்ற நிறுவனங்களைச் சார்ந்த வாகனங்கள் விரைவாக சேவை வழங்கும் நோக்கத்துடன் பயணிப்பதைக் காணலாம். நேரத்தின் அருமை கருதி பணி புரியும் இத்தகைய பணியாளர்களின் வாழ்க்கை முக்கியமானது. அவர்களின் ஒட்டுமொத்த நலனைப் பாதுகாக்கும் வகையில், அவர்களுக்கென தனியே நல வாரியம் ஒன்று அமைக்கப்படும்" என்று அறிவித்தார்.

அமைப்புசாரா தொழிலாளர்களின் சமூக பாதுகாப்பினை உறுதி செய்யும் விதமாக கல்வி, திருமணம், மகப்பேறு, கண் கண்ணாடி, ஓய்வூதியம், இயற்கை மரணம், விபத்து மரணம், விபத்து ஊனம், ஈமச்சடங்கு போன்ற பல்வேறு நல உதவிகளை 18 அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்களின் வாயிலாக தமிழ்நாடு அரசு வழங்கி வருகின்றது.

இவ்வரசு பொறுப்பேற்ற நாளிலிருந்து 31.07.2023 வரை, அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களில் 14,29,502 தொழிலாளர்கள் பதிவு செய்யப்பட்டு, 12,52,978 பயனாளிகளுக்கு 989.10 கோடி ரூபாய் நலத்திட்ட உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் விதமாக தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற பெண் ஓட்டுநர்களுக்கு புதிய ஆட்டோ வாங்குவதற்காக ரூபாய் ஒரு லட்சம் மானியம் வழங்கும் திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறது. தற்போது தொழில்முறை டாக்ஸி வாகனம் வாங்குவதற்கும் இத்திட்டத்தின் கீழ் மாற்று பாலினத்தவரான திருநங்கைகள் பயன்பெறவும் இத்திட்டத்தினை விரிவுபடுத்தி தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

அந்த வகையில், இணைய வழி சேவை நிறுவனங்களில் பணிபுரியும் உணவு விநியோகம் மற்றும் சேவைப் பணியில் ஈடுபட்டுள்ள அமைப்புசாரா தொழிலாளர்களான கிக் (Gig) தொழிலாளர்களின் ஒட்டுமொத்த நலனை பாதுகாக்கும் வகையில் தனியே நலவாரியம் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்தமைக்காக, ஓலா, ஊபர், ஸ்விக்கி, ஸொமாட்டோ, டன்ஸோ, ஸெப்டோ போன்ற இணைய வழி சேவை நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் முதலமைச்சர் அவர்களை நேற்று சந்தித்து தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்நிகழ்ச்சியில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ. கணேசன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையர் முனைவர் அதுல் ஆனந்த ஆகியோர் கலந்து கொண்டனர்.

### அனைத்து திருக்கோயில்களிலும் அர்ச்சகர் நியமன

## நடவடிக்கைகளை தொடர்ந்து அர்ச்சகர் நியமனம் செய்யலாம்!

### மாண்பமை உச்சநீதிமன்றம் உத்தரவு!

*சென்னை, ஆக.24-*

*சேலம், சுகவனேஸ்வரர் திருக்கோயிலில் அர்ச்சகர் நியமனம் குறித்த வழக்கில் நீதியரசர் ஆனந்த் வெங்கடேஷ் பிறப்பித்த உத்தரவினை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு தாக்கல் செய்யப்பட்டது. இதில் இடைக்கால தடையுத்தரவு வழங்கப்படாததால் மாண்பமை உச்சநீதிமன்றத்தில் சிறப்பு அனுமதி மனு தாக்கல் செய்தனர்.*

*மேற்படி மனு நேற்று முன்தினம் (22.08.2023) உச்சநீதிமன்றத்தில் நீதியரசர் எம்.எம்.சுந்தரேஷ் அடங்கிய அமர்வு முன்பாக விசாரணைக்கு வரப்பெற்றது. இதில் அரசு சார்பில் மூத்த வழக்கறிஞர் ஜெய்தீப்குப்தா, அரசு வழக்கறிஞர்கள் டி.குமணன் மற்றும் என். ஆர்.ஆர்.அருண் நடராஜன் ஆகியோர் ஆஜராகினர்.*

*விசாரணை முடிவில், அனைத்து திருக்கோயில்களிலும் அர்ச்சகர் நியமன நடவடிக்கைகளை தொடர்ந்து அர்ச்சகர் நியமனம் செய்யலாம் என உத்தரவிடப்பட்டுள்ளது. சுகவனேஸ்வரர் திருக்கோயிலில் அர்ச்சகர் நியமனம் தொடர்பான நடவடிக்கைகளை முடித்து உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள மேல்முறையீட்டு மனுவில் தீர்ப்பிற்கு உட்பட்டு மேற்கொள்ளலாம் எனவும் உத்தரவிட்டு வழக்கினை முடித்து வைக்கப்பட்டது.*